30th November 1970]

THIRU G. VASANTHA PAI : Sir, to answer the query of my hon. Friend Thiru Raghavanandam to the Hon. Minister, I would like to say that in the place where I am residing *i.e.*, First Main Road, Gandhinagar, Adyar, there is a wine shop and in the place where I go to our Sabha in Habibullah Road, there is another wine shop and in the place I pass through Nungambakkam, I find some Madras Wines. So I find a lot of liquor shops. A few days ago a gentleman came to my house after trying to meet the Hon. Minister Thiru Aditanar who lives opposite to me and not able to get access to him, he brought some six bottles alleged to be beer with six labels which were blank. He said "I could not get access to Thiru Aditanar. So I have come to you here. You are our M.L.C. The bottles contain only 20% water" He opened one bottle and I said, "I do not drink and I do not know the virtue of it. You please go to the person who drinks or give a complaint to the police station." He is supposed to have got those bottles from one of these shops and those bottles are passed off as beer with different labels. I have got the labels with me and I shall produce them when the Bill comes up.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : மாண்புமிகு உறுப்பினர்கள் மன்றத்தில் கேள்வி நேரத்தின்போது தகவல் கொடுக்கக் கூடாது என்ற மரபு இருக்கிறது. எனவே தகவலைத் தனியாகத் தந்தால் விசாரிக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, ''போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் தகவல் கொடுக்கும்படி சொன்னேன்'' என்று சொன்னார்கள். வழக்கறிஞருக்கு உரிய ஆலோசனையைத்தான் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். லிக்கர் ஷாப்புக்கான அனுமதிகள் பார்த்துத்தான் வழங்கப்படுகின்றன. ஆங்காங்கே அவர்கள் கடை வைத்திருக்கிறார்கள். அவர்கள் தவறு செய்தால் அதற்கு என்று சட்டப்படி நடவடிக்கை எடுக்க வழிமுறைகள் இருக்கின்றன. அதில் யாராவது தவறு செய்வதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தகவல் தெரிந்தால், அதைப்பற்றி எங்களுக்கு எழுதியனுப்பினால், போலீஸ் துறை மூலம் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுகிறோம். யாரோ ஒருவர் கலப்படம் செய்கிறார் என்பதற்காக ஒரு சட்டத்தையே, கொள்கையையே மாற்றுவதுபோல் கேள்வி கேட்பது சரியில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

Strike

*25. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether it is a fact that there was a strike by the conductors and drivers of the in State Transport Madras City during the month of April 1970, consequent on eve teasing by the brother of a bus driver ; and

(*b*) if so, the action taken against the culprit ?

வேலை நிறுத்தம்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பேருந்து வலவர் ஒருவருடைய சகோதரர், பெண்ணை நையாண்டி செய்ததன் விளைவாக 1970 ஏப்ரலில், சென்னை மாநகரில் அரசு போக்குவரத்தைச் சேர்ந்த பயணித் துணைகளும் (Conductor) வலவர்களும் (Drivers) வேலை நிறுத்தம் செய்தது உண்மையா ?

(இ) ஆமெனில், குற்றவாளி மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) தமிழ் நாடு அரசு போக்குவரத்துத் துறையின் வலவர் ஒருவர் தம்மை ஒரு தலைமை போலீஸ் காவலர் (Head Constable) தாக்கியதாகக் கூறியதைத் தொடர்ந்து தண்டையார்பேட்டை பணிமனையைச் சேர்ந்த நடத்துனர்களும் வலவர்களும் 14-4-1970 அன்று வேலை நிறுத்தம் செய்தனர்.

(இ) இச்சம்பவம் பற்றிக் காவல் துறையின் விசாரணை அறிக்கை கிடைத்தவுடன் தமிழ் நாடு அரசு போக்குவரத்துத் துறையால் தேவையான மேல் நடவடிக்கை எடுக்கப்படும். இப்போது அந்த அறிக்கை வந்துவிட்டது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அந்த அறிக்கையில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The following is the outcome of the case, according to the report received from the Commissioner of Police :—

The accused Thiru Srinivasan, brother of the State Transport Driver Thiru Panneer was fined Rs. 40/- or in default to undergo Rigorous Imprisonment for one week and also bound over under Section 106, Cr.P.C. for a period of one year with one surety for Rs. 100/- by the Honorary Presidency Magistrate, George Town, Madras. The allegations against the Head Constable were found to be false.

திரு. ஜி. சுவாமிநாதன் : என்ன காரணங்களுக்காக அந்த டிரைவருடைய சகோதரருக்கு அந்தத் தண்டனை வழங்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : பன்னீர் என்ற பெயர் கொண்ட டிரைவர் ஒருவர் 14-4-70 பிற்பகலில் ஒரு பக்கத்தில் பணி புரிந்து கொண்டிருந்தபோது, வண்டியில் வந்த சில பயணிகளுக்கும் சில பாதசாரிகளுக்கும் ஏற்பட்ட சச்சரவைப்பற்றி விசாரிப்பதற்காக போலீஸ் ஸ்டேஷனுக்கு வண்டி கடத்தப்பட்டதாகவும் அதைத் தொடர்ந்து இந்தச் சம்பவம் நடந்ததாகவும் விவரக் குறிப்பு சொல்கிறது.